தமிழ்நாடு முதலமைச்சர் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் (தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், அரியலூர்) காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி ஆயத்தப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன் ஆகியோர் தலைமையில் வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் இல.சுப்ரமணியன், சர்க்கரைத் துறை ஆணையர் சி.விஜய ராஜ்குமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநர் மரு.எஸ்.பிரபாகரன், கூட்டுறவுத்துறை சங்கங்களின் பதிவாளர் மரு.என்.சுப்பையன், மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப் தலைமையில் நேற்று (08.06.2023) நடைபெற்றது. மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ராமலிங்கம், மாநிலங்களவை உறுப்பினர் எஸ். கல்யாணசுத்தரம், தலைவர் தாட்கோ மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), என்.அசோக்குமார் (பேராவூரணி), நிவேதா எம் முருகன் (பூம்புகார்), அஞ்சுர் ஷாநவாஸ் (நாகப்பட்டினம்), வி.பி. நாகை மாலி (கீழவேளூர்), சங்கபிரதிநிதிகள், விவசாயிகள் அலுவலர்கள் உடன் உள்ளனர்.

தமிழ்நாட்டில் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு2023 போட்டிகள் நடத்துவது தொடர்பாக இந்திய விளையாட்டு ஆணைய அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை அலுவலர்களுடன் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (08.06.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் ஆலோசனை மேற்கொண்டார். இந்த கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இந்திய விளையாட்டு ஆணைய (SAI) துணை இயக்குநர் (பொது) திருமதி. எக்டா விஷ்னாய், (Ms. Esta Vishnoi, Deputy Director General) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி

பெரம்பலூர் மாவட்டம் முழுவதும் ஓர் ஆண்டிற்கு பொதுக்கூட்டங்கள்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

பெரம்பலூர், ஜூன் 9-

தி.மு.க. பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச்செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்த கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, டாக்டர் செ.வல்லபன், இரா.ப.பரமேஷ்குமார், வி.எஸ்.பெரியசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், என்.ஜெகதீஸ்வரன், எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத்,

மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லத்தம்பி, தி.மதியழகன், வீ. ஜெகதீசன், சோமு.மதியழகன், சி.ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் முத்தமிழச்செல்வி மதியழகன், ஒன்றிய பெருந்தலைவர்கள் மீனா அண்ணாதுரை, பிரபா செல்லப்பிள்ளை, க.ராமலிங்கம், துணை பெருந்தலைவர்கள் சாந்தாதேவிகுமார், எம்.ரெங்கராஜ், பேரூர் கழக செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலட்சுமி சேகர், ஜாஹிர் உசேன், பேரூராட்சி தலைவர்கள் சங்கீதா ரமேஷ், வள்ளியம்மை ரவிச்சந்திரன், பாக்கியலட்சுமி செங்குட்டுவன், துணை தலைவர்கள் செல்வலட்சுமி சேகர், எ.ரசூல்அகமது, சரண்யா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆர்.முருகேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அரசு குற்றவியல் வழக்கறிஞர் பா.செந்தில்நாதன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர். முத்தரசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் டாக்டர் அ. கருணாநிதி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சி.காட்டுராசா, ஏ.எம்.கே.கரிகாலன், தங்க.கமல், டி.ஆர். சிவசங்கர், தலைமைக் கழக பேச்சாளர்கள் எசனை ஆறுமுகம், மு.விஜய ரத்தினம், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல், வனிதா சுப்ரமணியன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் வ.சுப்ரமணியன், ஆர்.அருண், ரா.சிவா, மா.பிரபாகரன், அன்புச் செல்வன், ஆர்.கணேசன் மற்றும் மதுபாலன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைக் கழகங்களிலும் கொடியேற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்குவது எனவும்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை ஓர் ஆண்டிற்கு பெரம்பலூர் மாவட்டம் முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடத்துவது எனவும்,

"உடன் பிறப்புகளால் இணைவோம்" மூலம் அதிகளவில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கையில் ஈடுபடுவது எனவும்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா குழுவில், கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி.,யை, நியமனம் செய்த முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

திருவொற்றியூரில் மின் கழக தொ.மு.ச. சார்பில் நல உதவிகள்!

சசிகுமார் வழங்கினார் - முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 9-

சென்னை வடக்கு மாவட்ட திட்ட மின் கழக தொ.மு.ச. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவினை முன்னிட்டு 6.6.2023 அன்று திருவொற்றியூர் உபகோட்டம் காலடி பேட்டையில் தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. மாநிலத்தலைவர் கே.சசிகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி இனிப்பு வழங்கப்பட்டது.

மேலும், 200 மகளிர்க்கு இலவசப் புடவை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மின் கழக தொ.மு.ச. மாநிலத் தலைவர் கே.சசிகுமார் வழங்கி தொ.மு.ச. பேரவை கொடியை ஏற்றி வைத்தார்.

இதில் திருவொற்றியூர் உட்கோட்டம் செயற்பொறியாளர் உதயசூரியன், உதவி பொறியாளர்கள் தமிழ்ச்செல்வன், தினேஷ், சுப்பிரமணியன், ஏழுமலை, பிரேம், பன்னீர்செல்வம், பாரி, இளங்கோவன், சரவணன் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மும்பை புறநகர் குர்லா ஜெரிமெரி கிளை கழக சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் கழக மகளிர் பிரச்சாரக் குழுச் செயலாளர் நளினி சாரங்கன் சிறப்புரையாற்றினார். மும்பை புறநகர் மாநிலக் கழகச் செயலாளர் அலிசேக் மீரான், முனைவர் வதிலை பிரதாபன், வ.ரா.தமிழ்நேசன், வசந்தகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பெண்ணுரிமைக் காவலர் கலைஞர்!

தன் 18 வயதில் பெண்களின் உயர்விற்கு உரிமைக்கு குரல் கொடுத்தவர் கலைஞர்.

அறிஞர் அண்ணாவின் திராவிட நாடு 8 ஆவது இதழில்(26.02.1942)

" இளமை பலி " கட்டுரை வயோதிகக் கணவனை மணந்து அக்கிழவனையும் பறிகொடுத்து, விதவையான இளமங்கையின் சோக நிலையினை சித்தரிப்பதே 'இளமைப் பலி' கட்டுரையாகும்.

மனைவியை இழந்த கணவன் மறுமணம் செய்யும்போது, கணவனை இழந்த மனைவி, மறுமணம் ஏன் செய்யக்கூடாது? என்று பெண்ணுக்காக உரிமைக் குரல் கொடுக்கிறார் கலைஞர் .....

மறுமணம் தான் உண்டா ?
மங்கை நல்லாள் இன்பமுற !
சீ என்று இகழப் பட்டாளே அச்சீரிள நங்கை !

அந்தோ ! நாட்டினரே !
இன்னுமா உறங்குகின்றீர் ?
பெண்களின் ஓலத்தை கேட்டிலீரோ ?

" கைம்மை' கொடுமை கண்டு கலங்கிலீரோ?
விதவைப் பட்டத்தை விரும்பி அளிக்கின்றீரே!
மனைவி இறந்தால் மறுதாரம் மணம்புரியும்
நீங்கள் மங்கையரின்
மறுமணத்தை வெறுப்பது நன்றா ?

ஏ தமிழா ! பகுத்தறிவு எங்கேபோய்
பதுங்கிக் கொண்டது?
பெண்குலத்தின் கதியை
நீ ஏன் கண்டு கொள்ள வில்லை ?
எத்தனை நாளைக்கு நீ
அடிமையாக வாழப் போகிறாய் ?
இன்னும் எத்தனை நாளைக்கு
சுயமரியாதை யற்று வாழப் போகிறாய் ?
எத்தனை நாளைக்கு
மூட வைதீகத்தில் உழலப் போகிறாய் ?

ஐவருக்கும் தேவி அழியாப் பத்தினி என்றால்
ஆம் என்று தலை அசைக்கிறாய்.
அது எப்படி என்று கேட்கும்
பகுத்தறிவாதியை நாத்திகன் என்கிறாய்!
ஏ வீரப் புதல்வா!
நிமிர்ந்து பார் மேனாடுகளை !
அங்கு தழைத்தோங்கி நிற்கிறது
பெண்களின் உரிமை !
அதனால் அடைகின்றன மேன்மை !

ஆகவே செந்தமிழ்ச் செல்வா !
மங்கையர்தாம் நம் நாட்டின்
பொக்கிஷம் என்பதை மறவாதே !
அவர்கள் வாழ்வைக் கெடுக்காதே !
மறுமணத்தை மறுத்து அவர்கள்
இளமையை பலியிடாதே !

...பெண்ணுரிமைக் காவலர் கலைஞர்..

(அன்றைய பெண் சமுதாயம் சுமார் எண்பது ஆண்டுகட்கு முன் இருந்த அவலநிலையை எடுத்துக் காட்டும் இக்கட்டுரை இன்றைய இளைய சமுதாயம் அறிந்து கொள்ள பெருந்துணை புரியும்)

கேவிஆர்

கங்கைகொண்டான் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர்

இராம.அருள்ஜோதி - சாருமதி இல்ல மணவிழா வரவேற்பு!

திருச்சி என்.சிவா எம்.பி. - அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - சி.வெ.கணேசன் வாழ்த்துரை!

கடலூர், ஜூன் 9 - கடலூர் மாவட்டம், நெய்வேலி, கங்கைகொண்டான் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் இராம.அருணகிரி - சாருமதி ஆகியோரின் புதல்வர் அ.கார்த்திக்கிற்கும் சென்னை அம்பத்தூர் சு.சண்முகவேல் - சுமதி ஆகியோரின் புதல்வி ச.நிர்மலாவிற்கும் மணவிழா வரவேற்பு இன்று (9.6.2023 - வெள்ளிக் கிழமை) மாலை 6 மணியளவில் நெய்வேலி கஸ்தூரி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி என். சிவா, அமைச்சர்கள் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன், சட்ட மன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன், டி.ஆர். வி.எஸ்.ரமேஷ் எம்.பி.,

துரை கி.சரவணன், கும ரேஷ் உள்ளிட்ட மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகள் தொ.மு.ச. நிர்வாகிகள், கிளை கழக இந்நாள் - முன்னாள் நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, தகவல் தொழில்நுட்ப மணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

இரா.பொன்ராம் தலைமை! து.பிச்சை முன்னிலை!

சென்னை சாந்தோம் முதியோர் காப்பகத்தில் அறுசுவை உணவு!

சு.பத்மநாபன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் வழங்கல்!

சென்னை, ஜூன் 9-

உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் தமிழ்த்தாயின் தலைமகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வினை தொ.மு.ச. பேரவை இணைப்பில் உள்ள சங்கங்கள் பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிவுறுத்தலின்படி மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தொ.மு.ச. சார்பில் சென்னை சாந்தோம் நெடுஞ்சாலையில் உள்ள ஆதரவற்றோர் முதியோர் காப்பகத்தில் (காக்கும் கரங்கள்) உள்ள முதியோர்களுக்கு அறுசுவை உணவு 05.06.2023 மதியம் 01.30 மணியளவில் தொ.மு.ச. பேரவை செயலாளர் இரா. பொன்னுராம் தலைமையில் மாநில தலைவர் து. பிச்சை முன்னிலையில் அறுசுவை உணவு வழங்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் தலைவர் ரவீந்தரபாபு, டி.யு.சி.எஸ். திராவிட தொ.மு.ச பொதுச்செயலாளர் இராஜன் சாமிநாதன், தலைவர் ஆ.எம்.பி. நாதன் மற்றும் ஏராளமான முன்னாள், இந்நாள் நிர்வாகிகள், தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாநில பொதுச்செயலாளர் சு.பத்மநாபன் ஏற்பாடு செய்துள்ளார்.

புல்லட் கணேசன் தலைமை!

திருவல்லிக்கேணி 115 (அ) வட்டத்தில் அறுசுவை உணவு!

நே.சிற்றரசு - ஏ.ஆர்.பி.எம். காமராஜ் வழங்கினர்!

சென்னை, ஜூன் 9-

திருவல்லிக்கேணி பகுதி 115(அ) வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்கத்தை முன்னிட்டு மாவட்டப் பிரதிநிதி புல்லட் கணேசன் ஏற்பாட்டில் 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி ஜாம்பஜார் மார்க்கெட் அருகில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் பங்கேற்று பொதுமக்களுக்கு அறுசுவை உணவை மாவட்டப் பிரதிநிதி புல்லட் கணேசன் தலைமையில் வழங்கினர்.

இதில் வட்டச் செயலாளர் செந்தில்குமார், கலில் ரகுமான், வெங்கடேசன், ரவி, பச்சையப்பன், பஜார் கணேசன், கே.சுந்தர், கேபிள் ரவி, ஜி.சுந்தர், தஸ்தகீர், போண்டா துரை, மோகன், போட்டோ மணி, ஸ்ரீதர், ஆர்.கே.நகர் வெங்கடேசன், ராதா உள்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (08.06.2023) சென்னை, கிண்டியில், கட்டப்பட்டு திறப்பதற்கு தயாராக உள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டனர். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொதுப்பணித் துறை அரசு முதன்மைச் செயலாளர் சந்திரமோகன், தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்தின் நிர்வாக இயக்குநர் அரவிந்த், மருத்துவக் கல்வி இயக்குநர் மரு.சாந்திமலர், பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் சத்தியமூர்த்தி, ஆயத்தரசு ராஜசேகரன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.